# இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவினால்

## நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் செய்தி ஆசிரியர்களுக்கான தொழில் நடைமுறைக்கோவை (ஒழுக்கக்கோவை)

1. **முன்னுரை**

எல்லாப் பத்திரிகை நிறுவனங்களுக்கும் அவற்றுள் பணியாற்றும் பத்திரிகையாளர்களுக்கும் பொருந்தும் வகையிலான இந்த ஒழுக்கக்கோவை இலங்கையின் அச்சு ஊடகங்கள் சுதந்திரமாக செயற்பட்டு அதன் வாசகர்களது தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களை சரியாகவும் பொறுப்புணர்ச்சியுடனும் மேற்கொள்ள வேண்டியிருப்பதோடு பத்திரிகைத் தொழில்துறையின் மேன்மையையும் சிறந்த தராதரத்தையும் பாதுகாக்கும் நோக்கத்தை குறிக்கோளாகக் கொண்டதுமாகும்.

பிழையற்ற தன்மை மற்றும் தொழில் நேர்மை அத்துடன் பொது நலனுக்காக புலனாய்வு செய்தல், பத்திரிகைத் தொழிலின் தலை சிறந்த பண்பாடுகளைப் பேனுவதற்காகப் பத்திரிகைகள் சளைக்காது முயற்சியெடுத்துப் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு எதிராகச் சதி செய்யும், திரிபுபடுத்தும், வர்த்தகச் சார்பு அல்லது ஒழுங்கற்ற தாக்கம் அல்லது குறுகிய நோக்கம் ஆகியவற்றினால் விலங்கிடப்படாமல் இருக்க வேண்டும் என்பவற்றையும் குறிக்கொளாகக் கொண்டு இத்தரங்கள் தேவைப்படுகின்றன. பத்திரிகைகளும் ஊடகவியலாளர்களும் சுதந்திரமாகத் தம் சொந்தக் கருத்துக்களைக் கொண்டிருக்கவும் தமது திடமான கருத்துக்களை தாராளமாக வெளியிடவுமான சுதந்திரத்தை கொண்டுள்ள அதே வேளையில் அவர்கள் ஏனையவர்களின் கருத்துக்களுக்கு உரிய கவனம் செலுத்தி தமது சமூகப் பொறுப்பினை பிரதிபலிக்க முயற்சி எடுக்க வேண்டும்.

இக்கோவை தனி நபர் உரிமைகளைப் பாதுகாத்து பொதுமக்கள் செய்திகளை அறிந்து கொள்ளும் உரிமையைத் தாங்கி நிற்கிறது. அது எழுத்தில் மட்டுமல்லாது உட்கருத்திலும் மதிக்கப்பட வேண்டும். அதாவது தனி நபர் உரிமைகள் தொடர்பில் அதன் ஈடுபாட்டினை விட்டுக் கொடுக்கும் குறுகிய அடிப்படையில் அல்லது பொது நலன் பற்றிப் பிரசுரிப்பதை தடுக்கும் விதத்தில் விரிவாகவோ அதற்கு அர்த்தம் கற்பிபிக்கலாகாது.

- **ஏதேனும் முறைப்பாடுகள் தொடர்பில் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு பத்திரிகை ஆசிரியர்கள் துரிதமாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எந்தவொரு பிரசுரமும் பத்திரிகை தர்மத்தை மீறுவதாக தீர்ப்பளிக்கப்படுமிடத்து அதனை முழுமையாகவும் முக்கியத்துவம் கொடுத்தும் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் குறிப்புடன் பிரசுரிக்க வேண்டும்.**

2. **சரியான செய்தி**

2.1 செய்திகள் மற்றும் படங்களைச் சரியாகவும் திரிபுபடுத்தல் இன்றியும் வெளிப்படுத்த எல்லா ஊடகங்களும் சகலவிதத்திலும் நியாயமான கவனம் செலுத்த வேண்டும்

2.2 பிரசுரிப்பதற்கு முன் செய்தி அறிக்கைகள் சரியானவையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சகல செய்தி ஆசிரியர்களும் தனிப்படையான ஊடகவியலாளர்களும் நியாயமான எல்லா முயற்சிகளை

மேற்கொள்ள வேண்டும். அப்படி உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதவிடத்து அந்த நிலை பற்றிச் செய்தி அறிக்கையில் குறிப்பிட வேண்டும்.

2.3 செய்தி ஆசிரியர்களும் அவர்களது பணியாட்தொகுதியினரும் புறப்பங்களிப்பாளர் உட்பட தாம் அறிந்தவரை பொய்யானது அல்லது பிழையானது என நம்பக்கூடிய காரணம் உள்ள எந்தவொரு விடயத்தையும் ஆமோதிக்கும் விதத்தில் அறிக்கைகளைப் பிரசுரிக்க வேண்டாம்

2.4 பொது நலன் கருதி புலனாய்வு ஊடக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக வெளியீடுகள் ஆர்வமூட்டப்படுகின்றன.

## 3 பிழை திருத்தங்களும் மன்னிப்புக் கோரலும்

3.1 பொருளடக்கத்தைப் பொருத்தமட்டில் செய்தி அறிக்கையொன்று பிழையானது என்பதைச் செய்தி ஆசிரியர்கள் இனங்காணும் சந்தாப்பத்தில் பிழை திருத்தம் அல்லது மன்னிப்புக் கோரல் பாதிப்புக்கு இலக்காகிய கட்சியினரின் விருப் பத்திற்கு முரணாயிராதபட்சம் பொருந்தும் வகையில் மன்னிப்புக் கோரலுடன் உரிய முக்கியத்துவம் வழங்கி அதனை உடனே திருத்த வேண்டும்.

## 4 பதிலளிப்பதற்கான சந்தர்ப்பம்

4.1 தனி நபர் அல்லது ஸ்தாபனங்களின் நாணயம், மதிப்பு, கௌரவம் உணர்வுகள் இரகசியத் தன்மை மற்றும் பதவிக்கு பாதகம் ஏற்படுத்தும் வகையில் உண்மைக்கு முரணான அறிக்கைகள் பற்றிப் பதிலளிக்க அவர்களுக்கு நேர்மையான மற்றும் நியாயமான சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். பதிலானது உண்மைச் சம்பவங்கள் பற்றி புகார் விடுப்பவரின் விருத்தாந்தத்திற்கு மட்டுப்படுவதோடு பிழையொன்று எடுத்துக் காட்டப் பட்டதைத் திருத்துவதற்கான தேவையை விஞ்சக்கூடாது.

4.2 ஒரு பிழையைப் பற்றி மன்னிப்புக் கோருவதற்கு அல்லது கவலை தெரிவிப்பதற்கு மாறாகப் பத்திரிகைகள் அல்லது ஊடகவியலாளர்கள் பதில் அளிப்பதாயின் பாதிப்புக்கு இலக்காகிய கட்சியினருக்கு பதிலளிக்க மீண்டும் புதியதொரு சந்தர்ப்பத்தை வழங்க அவர்கள் தயாராக இருத்தல் வேண்டும்.

## 5 இரகசியமான மூலங்கள்

5.1 தகவலைப் பெற்றுக்கொள்ள இரகசியமான மூலங்களை, அம் மூலங்கள் மாறாக அனுமதித்தாலன்றி பாதுகாப்பதற்கு ஒவ்வாரு ஊடகவியலாளரும் பொதுவாகக் கடமைப் பட்டுள்ளனர்.

## 6 பொதுவான செய்தி அறிக்கை மற்றும் எழுத்தில் வடித்தல்

6.1 அக்கிரமம், வன்செயல்கள், ஔடதங்களின் துஷ்பிரயோகம், கொடூரத்தன்மை பிறருக்கு நோவினை செய்தல், காமம் மற்றும் ஒழுக்கக் கேடு போன்ற குறிப்பாக அதிர்ச்சியூட்டும் அத்துடன் உணர்வுகளில் நோவினையை ஏற்படுத்தும் சுபாவத்தையுடைய சமூகப் பிரச்சினைகளைப் பற்றிய விடயங்கள் தொடர்பாக அச்சு ஊடகம் பொது நலன் கருதிச் செய்திகளைப் பிரசுரிக்கும் அதன் கடமைக்கமைய உண்மைச் சம்பவங்கள் கருத்துக்கள் புகைப்படங்கள் மற்றும் சித்திரங்களை உரிய உணர்வுடனும் விவேகத்துடனும் சமர்ப்பிக்க விஷேட கவனம் எடுக்க வேண்டும்.

6.2 குற்றச் செயல்கள் அல்லது குற்றச் செயல் வழக்கு பற்றிய விடயங்களை அறிவிக்கும்போது சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டு மற்றும் பொது நலன் கருதி அல்லாமல் பின்வருவனவற்றைப் பிரசுரிக்கக் கூடாது.

- பாலியல் குற்றச் செயலினால் பாதிக்கப்பட்டவரின் பெயர், விபரங்கள்
- குற்றச் செயல் பற்றி குற்றம் சாட்டப்பட்ட 16 வயதுக்குட்பட்ட மற்றும் முன்பு தண்டனை அனுபவித்திராத இளம் வயதினர் ஒருவரின் பெயரை வேண்டுமென்றே குறிப்பிடல்
- குற்றச் செயலொன்றுக்காக அல்லது தண்டனை வழங்கப்பட்டுள்ள ஒருவரின் உறவினர்களை அவர்களது சம்மதம் இன்றி இனம் காண்பித்தல்.

6.3 ஊடகவியலாளர் ஒருவர் தாம் அறிந்திருந்தும் அல்லது வேண்டுமென்றே இன, மத, ரீதியான முரண்பாடுகளுக்கு வழிவகுக்கும் வகையில் சமய ஒற்றுமையின்மையை அல்லது வன்செயல்களைத் தூண்டும் வகையில் தமது எழுத்துக்களைக் கையாளக்கூடாது.

6.4. i ஒருவரின் குலம், நிறம், மதம், இனம் மற்றும் பாலியல் அல்லது ஏதுமொரு உடல் அல்லது பலவீனம் பற்றித் தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தக்கூடிய அல்லது அநியாயமாகக் குறிப்பிடுவதில் இருந்து ஊடகம் தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.

ii .செய்தியுடன் நேரடியாக தொடர்பு இல்லாத பட்சத்தில் ஒருவரின் குலம், சாதி, மதம், பாலியல் சாய்வு, இனம், உடல் அல்லது மனநோய் அல்லது குறைபாடு பற்றிய விவரங்களை பிரசுரித்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

6.5 (i) சட்டம் தடுக்காத போதிலும் பிரசித்தமாக பிரசுரிக்க முன் முற்கூட்டித் தமக்கு கிடைக்கும் தகவலைத் தன் சொந்த நிதி இலாபத்திற்காக ஊடகவியலாளர்கள் பாவிக்கக் கூடாது என்பதோடு ஏனையவர்களின் இலாபத்திற்காக அத்தகைய தகவலை வழங்கவும் கூடாது.

(ii) தான் அல்லது தனது நெருங்கிய உறவினர்கள் கணிசமான அளவு நிதி பற்றிய சிரத்தை கொண்டுள்ளதாகத் தான் அறிந்திருக்கும் பங்குகள் அல்லது உறுதிப் பத்திரங்கள் பற்றி தன் சிரத்தையை செய்தி ஆசிரியர்கள் அல்லது நிதிச் செய்தி ஆசிரியர்களுக்கு அறிவிக்காமல் எழுதக் கூடாது.

- **தற்கொலை தொடர்பான செய்திகள் பிரசுரிக்கப்படும் பொழுது அதனைக் கவனமாக கையாளுவதுடன் எவ்வாறு தற்கொலை மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பான விபரங்களை பிரசுரித்தல் தவிர்க்கப்பட வேண்டும். தற்கொலைக்குப் பயன்படுத்திய திரவப் பொருள், மற்றும் பொருட்கள், என்பவற்றின் பெயர்களைச்செய்தி அறிக்கையில் குறிப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.**

## 7 இரகசியத்தன்மை

7.1 தனி நபர்களின் ஏகாந்தம் மற்றும் குடும்ப வாழ்க்கை அவர்களின் வீட்டு விவகாரங்கள், உடல் நலன் மற்றும் கடிதப் போக்குவரத்துக்கள் ஆகியவற்றை மதிப்பதில் ஊடகம் குறிப்பாகக் கவனஞ் செலுத்த வேண்டும். பொது நலன் மிகைக்கும் போது மாத்திரமே சம்மதம் இன்றி இத்தகைய ஏகாந்தமான விடயங்களில் தலையிடுவதை நியாயமெனக் கொள்ளலாம்.

7.2 பொது நலனுக்காகவன்றி தனியார் அல்லது பிரசித்த இடங்களில் நியாயமாக ஏகாந்தத்தை எதிர்பார்க்க அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதவை தவிர்த்து சம்மதம்

இன்றி மனிதர்களைப் புகைப்படம் எடுப்பதற்காக தொலை நோக்கு (பெருப்பிக்கும்) கண்ணாடிகளை (லென்ஸ்) களை அல்லது புகைப்படக் கருவிகளைப் பாவித்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

7.3 துக்கம் அல்லது அதிர்ச்சி சம்பந்தப்பட்ட விடயங்களில் விசாரணைகள் அல்லது தலையிடுவதை உணர்வுடனும் விவேகத்துடனும் மேற்கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

7.4 இளம் வயதினர் தம் பாடசாலைப் பருவத்தை அநாவசியமான தலையீடு இன்றிப் பூரணப்படுத்தும் சுதந்திரத்தைக் கொண்டிருதல் வேண்டும். ஒரு பிள்ளையின் ஏகாந்த வாழ்க்கையைப் பற்றி அச்சிறுவனின் அல்லது அச்சிறுமியின் குடும்பம் அல்லது பாதுகாவலரின் பிரபல்யம், கெட்ட பெயர் அல்லது பதவி ஆகியவற்றைக் கவனியாது அலாதியானதொரு பொது நலன் இருந்தால் மாத்திரமே செய்தியைப் பிரசுரித்தல் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

7.5 பொது நலனுக்காகவன்றி வைத்தியசாலைகள் அல்லது அத்தகைய நிறுவனங்களில் உள்ளவர்கள் பற்றி மேற்கொள்ளப்படும் விசாரணைகள் ஏகாந்தத்தில் தலையிடுவது பற்றிய இக்கட்டுப்பாடுகளுடன் குறிப்பாக இணையானவையாகும்.

## 8. தொந்தரவு மற்றும் தந்திரோபாயம்

8.1 புகைப்பட ஊடகவியலாளர்கள் உட்பட ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்தல் அல்லது திரித்துக் கூறல் மூலம் அல்லது தந்திரமான வழிகலைக் கையாண்டு தகவலை அல்லது புகைப்படங்களைப் பொற்றுக்கொள்ள முயலலாகாது. பொது நலன் அல்லது விடயத்தைப் பெற்றுக்கொள்ள வேறு வழியில்லை என்ற நியாயம் இல்லாமல் தொலை நோக்கு கண்ணாடி (ஸூம் லென்ஸ்) புகைப்படக் கருவிகளைப் அல்லது ஒற்றுக்கேட்கும் கருவிகளைப் பயன்படுத்தக் கூடாது.

## 9 கௌரவம்

9.1 ஒவ்வொரு ஊடகவியலாளரும் அவனது அல்லது அவளது தொழிலின் சுய கௌரவத்தைப் பேண வேண்டும்.

## 10 பொதுமக்கள் நலன் பின்வருவனவற்றை உள்ளடக்கும்

நல்லாட்சி மற்றும் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு சனநாயகம் மற்றும் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாத்தல் அத்துடன் குற்றச் செயலகள், ஊழல், நிர்வாக சீர்கேடு அல்லது பாரிய தவறொன்றினைக் கண்டு பிடித்தல் அல்லது அம்பலப்படுத்துதல் என்பன அடங்கும்.

பொதுமக்கள் பாதுகாப்பு, சமூக, கலாச்சார, கல்வி மற்றும் பொதுமக்கள் கவனத்தை ஈர்க்கும் பொதுமக்களோடு சம்பந்தப்பட்ட வேறு ஏதேனுமொரு பிரச்சினை போன்ற விடயத்தில் மற்றும் அல்லது மக்கள் நலனுக்கு எவ்வாறு தொன்டாற்றப்பட்டது என்பது பற்றி செய்தி ஆசிரியரிடமிருந்து முழுமையான விளக்கமொன்றைத் தேவைப்படுத்தவதற்கு பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு உரிமை உண்டு.

- **இணையத்தள பிரசுரங்கள்**
  அச்சு ஊடகங்களின் இணையத்தள பிரசுரங்களிலும் இந்த பத்திரிகை தர்மங்கள் கடைப் பிடிக்கப்பட வேண்டும்.

**மீளாய்வு**

வருடத்திற்கு ஒரு முறைக்கு குயைாத விதத்தில் காலத்துக்கு காலம் இக்கோவையின் ஏற்பாடுகளை இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் மீளாய்வு செய்தல் வேண்டும். பத்திரிகை ஆசிரியர் சங்கத்தினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்கள் அல்லாதோருடன் பத்திரிகை ஒழுக்கக்கோவைக் குழுவினர் கலந்தாலோசிக்க வேண்டும்.

**கீழ்வரும் அமைப்புக்கள் இதற்கு ஒத்தழைப்பு வழங்கியுள்ளன.**

1. இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
2. இலங்கை இதழியல் கல்லூரி
3. இலங்கை உழகைக்கும் பத்திரிகையாளர் சங்கம்
4. ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம்
5. சுதந்திர ஊடக அமைப்பு
6. ஊடக தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம்
7. இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்
8. இலங்கை பத்திரிகை வெளியீட்டாளர் சங்கம்
9. தெற்காசிய சுதந்திர ஊடக சங்கம்